# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ    அதிவிசேஷமானது**

අංක 1768/26 - 2012 ජූලි 27 වැනි සිකුරාදා - 2012.07.27

***1768/26 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

**(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், கரந்தெனிய பிரதேச செயலாளர் பிரிவில், பொரகந்த கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கா 2539 மற்றும் 14.08.1993ஆந் திகதிய துண்டு இல. 01 மற்றும் 02 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 0.810 ஹெக்டயார் மொத்த விஸ்தீரண முடைய காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

*1.* **துண்டு இல.** *1*

காணியின் பெயர் : முள்கெடிய எல அத்தர வயலின் ஒரு பகுதி ; விஸ்தீரணம் : 1 ஏக்கர்.

*2.* **துண்டு இல.** *2*

காணியின் பெயர் : நராவெல அல்லது ஹல்வதுர எலயாய இன் ஒரு பகுதி ; விபரம் : - ; விஸ்தீரணம் : 1 ஏக்கர்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு கரந்தெனிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். என். எஸ். டீ. கே. த சில்வா,
பிரதேச செயலாளர்,
கரந்தெனிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கரந்தெனிய,
2012.07.23.

08- 366

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.